1973 ஆகஸ்ட் 7]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: திருச்சி மாவட்டம், கிருஷ்ணராயபுரம் ஒன்றியம், பழைய ஜெயங்கொண்டத்திலுள்ள தச்சுப்பட்டறை நட்டத்தில் வேலை செய்கிறது. இதுபோன்ற பட்டறைகளின் தொழில் நுட்ப நிர்வாகக் கட்டுப்பாட்டை கதர் வாரியத்தின் கீழ் கொண்டுவரவும் அப்பட்டறைகளின் கண்காணிப்பு ஊராட்சி ஒன்றியங்களிடமே இருந்து வரவேண்டும் என்றும் அரசு முடிவு செய்துள்ளது.

Kotturpuram Housing Scheme

* 67 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether it is a fact that the Housing and Urban Development Corporation, New Delhi, have undertaken to finance the Kotturpuram project of the State Housing Board; and

(*b*) if so, the details thereof?

THE HON. THIRU K. RAJARAM: (*a*) Yes.

(*b*) Housing and Urban Development Corporation Limited has sanctioned a sum of Rs. 195 lakhs. The HUDCO has so far released Rs. 39 lakhs for the Scheme. Further amounts will be released every quarter in the course of completion of the scheme.

கோவையில் குடிசை மாற்றுப் பணிகள்

* 68 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவையில் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடு கட்டும் திட்டம் இந்த ஆண்டில் எடுத்துக்கொள்ளப்படுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: சென்னை மாநகரத்தில் மட்டுமே தற்சமயம் குடிசை மாற்று வாரியம் பணிபுரிந்து வருகின்றது. வெளியூர்களில் குடிசைப் பகுதி மாற்றும் திட்டங்கள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் செயல்படுத்தப் பட்டு வருகின்றன. கோவைப் புதூர் பகுதியிலும் கோவை நகர வின்செண்ட் சாலைப் பகுதியிலும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் புதிய குடியிருப்புகள் கட்டுவதற்கான செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் இருந்து வருகின்றன.